பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**09 02 2026 6 45**

**திங்கட்கிழமை காலை**

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. தேர்வு குறித்து மாணவர்களின் அச்சத்தைக் களையும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடும் பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியின் இரண்டாவது பகுதி இன்று நடைபெறுகிறது.

2. அரசின் நலத் திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்வதில் அரசு ஊழியர்கள் முக்கிய பங்காற்றி வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

3. திமுக அரசின் திறமையற்ற செயல்பாடுகள் காரணமாக மாநிலத்தின் கடன் சுமை அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு பனிமூட்டம் நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் **Babuta** - இளவேனில் வாலறிவன் இணை தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேர்வு குறித்த அச்சத்தைக் களையும் வகையில் பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடும் பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியின் இரண்டாவது பகுதி இன்று காலை 10 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இந்த பகுதியில் தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர், சத்தீஸ்கட் மாநிலம் ராய்ப்பூர், குஜராத்தில் உள்ள தேவ்மோக்ரா மற்றும் அசாமில் குவஹாத்தி ஆகிய இடங்களில் இருந்து பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மாணவர்களின் தேர்வு குறித்த மன அழுத்தம், தேர்வுக்கு தயாராவதற்கான உத்திகள், நேர மேலாண்மை, தன்னம்பிக்கையுடன் தேர்வுகளை எதிர்கொள்வது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து பிரதமர் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்ச்சி பிரதமர் திரு நரேந்திர மோடியின் யூடியூப் அலைவரிசை, தூர்தர்ஷன் தொலைக்காட்சி, கல்வி அமைச்சகத்தின் சமூக ஊடக தளங்களில் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

இது தவிர, வேவ்ஸ் ஓடிடி, அமேசான் பிரைம் வீடியோ, ஜியோ, ஜீ5, சோனி லைவ், ஸ்பாட்டிஃபை உள்ளிட்ட ஓடிடி தளங்களில் இந்த நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்படுகிறது.

பிரதமரால் வடிவமைக்கப்பட்ட பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியில் ஆண்டுதோறும் புதிய அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உத்வேகம் அளிக்கும் என்று அகில இந்திய வர்த்தக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த கூட்டமைப்பின் தலைமைச் செயலாளர் திரு. பிரவீன் கந்தேல்வால் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகின் வலிமையான பொருளாதார நாடாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதற்கு இந்த ஒப்பந்தம் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில் நம்பகத்தன்மை கொண்ட வர்த்தக நாடாகவும், போட்டித்தன்மை மற்றும் தன்னம்பிக்கை ஆகிய அம்சங்களுடன்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை இது பிரதிபலிப்பதாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜவுளி மற்றும் ஆடைகள் தோல் மற்றும் காலணிகள், செயற்கை கற்கள் மற்றும் நகைகள், மருந்துப் பொருட்கள், வாகனங்கள் மற்றும் விமாங்களுக்கான உதிரி பாகங்கள், ரசாயனங்கள், பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் பொருட்கள், கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு உற்பத்தி துறைகளுக்கு இந்த ஒப்பந்தம் பெரிதும் பயனளிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

உலகின் பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ள இந்தியாவின் ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கு ஏதுவாக சந்தை வாய்ப்புகள் மற்றும் வரி விகிதங்கள் நெறிமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக திரு. பிரவீன் கந்தேல்வால் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஒரு கோடிக்கும் அதிகமான பள்ளிக் குழந்தைகளுக்கு கட்டாய பயோமெட்ரிக் பதிவுகளை புதுப்பிப்பதற்கான பணிகள் நிறைவடைந்தள்ளதாக இந்திய தனித்துவ அடையாள ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் மண்டல அலுவலகங்கள் மற்றும் மாநிலங்களின் கல்வித்துறை இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 மாதங்களில் நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் 83 ஆயிரம் முகாமகள் நடத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

7 முதல் 15 வயதுடைய பள்ளிக் குழந்தைகளுக்கு ஆதார் விவரங்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு கடந்த அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் இந்த ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதி வரை கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அரசின் நலத் திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்வதில் அரசு ஊழியர்கள் முக்கிய பங்காற்றி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டிற்கே முன்னோடியாக திகழும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

நிதிப் பற்றாக்குறை இருந்தபோதிலும் மாநிலத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை முதலமைச்சர் பட்டியலிட்டார்.

<<<<>>>>

திமுக அரசின் திறமையற்ற செயல்பாடுகள் காரணமாக மாநிலத்தின் கடன் சுமை அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கு மாநில அரசின் திறமையற்ற செயல்பாடுகளே காரணம் என்று கூறினார்.

விரைவில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்போம் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்ப்பது தொடர்பாக சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகம் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு பனிமூட்டம் நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் இருந்து உருவாகும் கிழக்கு திசைக் காற்று நிலப் பகுதிக்குள் ஈரப்பதத்தைக் கொண்டு வருவதால் பனிமூட்டம் ஏற்படுவதற்கு உகந்த சூழலை உருவாக்கும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகை அருகேயுள்ள முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் இலந்தைப் பழ சீசன் தொடங்கியுள்ளது.

பழங்களை உண்பதற்காக வனப் பகுதியில் இருந்து கரடிகள் வருவதால் சுற்றுலாப் பயணிகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Saravanan - 53 Sec)**

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

**ரஷ்யாவின் ஏவுகணைகள், ட்ரோன்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அந்நாட்டு நிதித் துறையுடன் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களுக்கு யுக்ரைன் அரசு புதிய தடைகளை விதித்துள்ளது.**

**--------------**

**நேபாளத்தில், 61-வது இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம், அந்நாட்டுத் தலைநகர் காத்மாண்டுவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் கொண்டாடப்பட்டது.**

**--------------**

**பங்களாதேஷ் நாடாளுமன்ற தேர்தலில் 275 சுயேட்சைகள் உட்பட மொத்தம் 2 ஆயிரத்து 34 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.**

**--------------**

தென்காசியில் நடைபெற்ற பொதிகை புத்தக திருவிழாவில் ஒரு கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன.

--------------

புராதன சிறப்பு வாய்ந்த திருவாரூர் ஸ்ரீ ரேணுகா தேவி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

--------------

தூத்துக்குடியில் உள்ள அனல் மின் நிலையத்தில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணியின்போது தவறி விழுந்த தொழிலாளர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

--------------

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவிலில் மகா சிவராத்திரி விழா கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது.

--------------

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் வார விடுமுறையை ஒட்டி ஏராளமான சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர்.

-------------

ஈரோடு மாவட்டம் தாளவாடி மலைப் பகுதியில் யானை தாக்கி உயிரிழந்த விவசாயியின் குடும்பத்திற்கு வனத்துறை சார்பில் **10** லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே தனியார் ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனத்தின் பூமி பூஜை மாவட்ட ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

-------------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் **Babuta -** இளவேனில் வாலறிவன் இணை தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்புக் குழு **10** மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-------------

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் சர்விசஸ் அணி வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது.

அசாமில் நேற்று நடைபெற்ற இறுதி போட்டியில், சர்வீசஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் கேரளா அணியை வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

இந்த வெற்றி மூலம் சர்வீசஸ் அணி 8 - வது முறையாக சந்தோஷ் கோப்பையை வென்றுள்ளது.

-----------

பெங்களூருவில் நடைபெற்ற நெதர்லாந்துக்கு எதிரான டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி தகுதி சுற்றில் இந்தியா 3-2 என்ற ஆட்டக்கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது தகுதிச் சுற்றுப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

------------

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய உள்ளரங்கு தடகள போட்டிகளில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது.

---------

அபுதாபி மாஸ்டர்ஸ் விளையாட்டுப் போட்டி வண்ணமிகு நிகழ்ச்சிகளுடன் அபுதாபியில் நேற்று தொடங்கியது.

இம்மாதம் 14-ம் தேதி வரை 20 பிரிவுகளில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில், 92 நாடுகளை சேர்ந்த 25 ஆயிரத்திற்கும் அதிகமான வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இப்போட்டியின் நிறைவுநாள் நிகழ்ச்சி இம்மாதம் 15-ம் தேதி நடைபெறுகிறது.

**<<<<The End>>>>**